# இரட்டுற மொழிதல்

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல்.
- இதனை சிலேடை என்றும் கூறுவர்.
- இப்பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் உள்ளது.
- இப்பாடல் ஆசிரியர் சந்தக்கவிமணி தமிழழகனார் – சண்முக சுந்தரம் – 12 சிற்றிலக்கிய நூல்கள் எழுதியுள்ளார்.

# ஆழிக்கு இணை

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்


மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்


அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு

இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

– தனிப்பாடல் திரட்டு

# பொருள்



# ஒப்பீடு

| பாடல் அடிகள் | தமிழுக்கு | கடலுக்கு |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினைஅமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை,கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல் |